# விடியல்

The Dawn

இதழ்-66, அக்டோபர்-2014

தனிச்சுற்றுக்கு மட்டும்

<u>கௌரவ ஆசிரியர்</u>

முனைவர். நா. கண்ணன்

கல்லூரி முதல்வர்

<u>ஒருங்கிணைப்பு</u>

முனைவர்.பெ.கணேசமுருகன்

துறைத்தலைவர்

<u>ஆசிரியர் குழு</u>

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

<u>தட்டச்சு & இதழ் வடிவமைப்பு</u>

முனைவர்சி.ஆர்.சுரேஷ் முனைவர் த.சுந்தரராஜ்

திரு. செ.தங்கராஜ் திரு. மு. சதீஸ்குமார்

வெளியீடு:

**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)

திருச்செங்கோடு–637215.

தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in

**E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## <u>தலையங்கம்</u>

உலக சுகாதார அமைப்பின் 2002 அறிக்கையின் படி, உலகில் உள்ள 45 மில்லியன் கண்பார்வையற்றோரில் 80 விழுக்காட்டினர் 50 வயதிற்கும் அதிகமானோர் ஆவர். கண்பார்வை யற்றோரில் 90 வீதமானோர் வறிய நாடுகளில் வாழ்கின்றனர். மேலும், கண்பார்வையின்மைக்கு முக்கியமான காரணிகளான கண் புரை நோய், கண் அழுத்த நோய் போன்றவற்றுக்கு இலகுவாகவும், மலிவாகவும் சிகிச்சை அளிக்க முடியும். பன்னாட்டு அரிமா சங்கங்கள் கண்பார்வையின்மையைத் தவிர்க்க உதவும் சில பன்னாட்டு அமைப்புகளுடன் இணைந்து முதன் முதலாக 1998, அக்டோபர் 8 ஆம் நாள் உலக கண்ணொளி நாளைக் கடைப்பிடித்தது. இந்த நிகழ்வு பின்னர் உலக சுகாதார அமைப்பின் விசன் 2020 என்ற பன்னாட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, 2000 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் மாதங்களில் இரண்டாவது வியாழக்கிழமையன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

விசன் 2020 திட்டத்தில் 2020 ஆம் ஆண்டளவில் கீழ்க்கண்ட ஏழு நோய்களால் எவரும் பார்வை இழக்ககூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அரசுகள் செயல்பட உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்துகிறது.

- கண்புரை
- கண்ணிமை உட்புற டிராகோமா
- கண்ணில் நீர் வழிதல்
- குழந்தைகளில் பார்வைக் குறைபாடு
- மங்கலான பார்வை
- சர்க்கரை நோயால் விழித்திரைப் பாதிப்பு
- கண் நீர் அழுத்த நோய்.

# உள்ளடக்கம்


**கவிதை**..........................3-11

- விடியுமா?
- இயற்கை
- வாழ்த்துங்கள் வாழ்த்தப்படுவீர்கள்
- குழந்தையின் ஆசை
- எதிரியையும் நேசி
- நட்பு
- ஹைக்கூ
- கோவில்
- என் இனிய பனைமரமே
- நட்பு
- இயற்கை
- அன்புள்ள அம்மா
- வெற்றியின் ரகசியம்
- நான் நேசித்தவை
- நட்பு
- அந்தநாட்கள்
- இமை
- வலி
- மனிதன்
- சோம்பேறி
- பார்த்து நடங்க
- நண்பன்
- நேர்மை
- நண்பன்
- நட்பு
- வாழ்க்கைப்பாதை
- உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு
- கல்வி
- உன் பிறந்த நாள்
- நண்பன்
- நட்பு
- தாயின் துன்பம்
- ஆசிரியர்

**சிறுகதை**.......................12-18

- அரசர் பெரியவரா? கடவுள் பெரியவரா?
- முத்தம்மாள்
- பேராசை பெருநட்டம்
- சுதந்திரத்தின் சுகம்
- பொறுமைக்குக் கிடைத்த பரிசு

**கட்டுரை**.........................19-21

- மேழி பிடிக்கும் கை வேளாளனின் கை
- மனித இனமே நீ எங்கே செல்கிறாய்?
- புத்திசாலித்தனமும் வாழ்க்கையில் முக்கியம்

**பொது அறிவு**.............21-28

- அறிய வினாவும் விடையும்
- அறிந்துகொள்வோம்
- "ஸ்டெல்லர்ஸ் ஜே" என்ற சிட்டுக்குருவி
- World population & Tamilians
- உலகின் பெரியவை
- சின்னச் சின்ன செய்திகள்

**சிறப்புப்பகுதி**..............29-31

- நம்ம ஊர் செய்தி

**ஒளிநிழல் படம்**.................32

- கவிபாடும் காட்சிகள்

# கவிதைகள்

## விடியுமா?

அரண்மனை போல வீடு
பளிங்குத்தரை
பயணத்திற்கு பல கார்கள்
படுத்துறங்கப் பஞ்சு மெத்தைகள்
அறுசுவை உணவு
எண்ணற்ற ஆடைகள்
ஆயிரம் உறவுகள்
நாளும் கொண்டாட்டம்.
கனவு கலைந்து விழித்துப்பார்த்தாள்
அந்த ஏழைச்சிறுமி
கனவில் வந்த அந்த ராஜவாழ்க்கை
எங்கே நிஜத்தில்?

**நா. நதியா,**
இளங்கலை ஆங்கில இலக்கியம்
இரண்டாம் ஆண்டு.

## இயற்கை

மழைமேகம் கதிரவனை மறைத்திருக்க
சற்று முன் பெய்த மழை நீர்
மரங்களில் தங்கி நிற்க
பூக்களின் வாசமும்
சாரலின் ஈரமும்
காற்றில் நிறைந்திருக்க
அந்த மென்காற்றும்
என் நாசியைத் தழுவும்.
வளைந்து செல்லும்
செம்மண் சாலையின் இருபுறமும்
பசும்புற்கள்
கம்பளமாய் விரிந்திருப்பதைக் கண்டு
கடிகார முள்ளை விட
மெதுவாய் நடக்கிறேன்.
தென்றலில் கலந்த மண்வாசம்
என் மனதைக் கட்டிப்போடுகிறது.

**செ. சௌந்தர்யா**
இளங்கலை இரண்டாமாண்டு கணினிஅறிவியல்.

## வாழ்த்துங்கள் ! வாழ்த்தப்படுவீர்கள் !!

கீழே விழுந்தவனைப் பார்த்துச்
சிரிக்காமல்
அவனை அரவணைத்து
கைகொடுக்கும் கரங்கள்
தேவனின் கரங்கள்
வாழ்த்துங்கள்! வாழ்த்தப்படுவீர்கள்!!
பெறாத மதிப்பெண்களுக்காக
தண்டிப்பதை விட
பெறப்போகும் மதிப்பெண்களுக்காக
வாழ்த்துங்கள்!
நீங்கள் வாழ்த்தப்படுவீர்கள்.
சிறியதோ, பெரியதோ
சாதனைகள் அல்ல முக்கியம்

சாதிக்க நினைக்கிற முயற்சி தான்
முக்கியம்
வாழ்த்துங்கள் வாழ்த்தப்படுவீர்கள்
வாழ்ந்தபிறகும்!

**ச.ராஜவேல்,** II B.Sc (EC)

## குழந்தையின் ஆசை

நீ பார்க்கும் போது பேச
நினைக்கிறேன்
நீ சிரிக்கும் போது ஒன்றை சொல்ல
நினைக்கிறேன்
நீ என்னை முத்தமிடும் போதும்
உன்னுடன்
உரையாட நினைக்கிறேன்
முடியவில்லை.
கடவுளே சீக்கிரம் எனக்கு
பேசக் கற்றுக்கொடு
"அம்மா" என்றழைக்க.

M. Soundharya, I-B.Com.

நண்பனையும் நேசி
எதிரியையும் நேசி
நண்பன்
வெற்றிக்கு துணையாய் இருப்பான்
எதிரி
வெற்றிக்குக் காரணமாய் இருப்பான்.

R.**பூர்ணிமா**, I B.Com.

## நட்பு

என் வெற்றியைக் கொண்டாட
சுற்றி நின்றார்கள் ஆயிரம் பேர்
ஆனால் நிச்சயமாய் தெரியும் எனக்கு
தோல்வியின் போது நீ மட்டுமே
துணையாய் இருப்பாய் என்று.

P.Samboornavalli, II BA English.

## ஹைக்கூ

விதவையும் பூச்சூடுகிறாள்
பிணமாய் கிடக்கையில் மார்பில்
விழுகின்றன
பூமாலைகள்

S.Kamali, II BA English

## கோவில்

நம்பிக்கைக்கு வடிவம் தந்து
தெய்வமாய் நினைப்பார்க்கு
வரம் தரும் கடவுளாகவும்
கல்லாய் நினைப்பார்க்கு
வெறும் கல்லாகவும்
கடவுள் அமர்ந்திருக்கும் இடம்
கோவில்.

P.**வெண்ணிலா**. II BA Eng.

## என் இனிய பனைமரமே...

எந்த வாய்க்காலும் உனக்குவழிவிடாது
எந்த உழவனின் மண்வெட்டியும்
உன் பாதத்தைப் பக்குவப்படுத்தாது
எந்த வீட்டுக்காரனும்
உன்னை வாசலில் வளர்த்து
ரசிக்கமாட்டான்

ஏன்?
உன் முள்மேனியா
இல்லை
முதல் குடிமகனை உருவாக்கிய
உன் வெள்ளை இரத்தமா?
உலகில் முதல் எழுத்துக்கள்
தடம் பதிக்க இடம் கொடுத்தவை
மரப்பலகை, சுட்டசெங்கல்...
அப்பொழுது தமிழ் மண்ணில்
உன் கைவிரல்கள் தானே
கத்தரிக்கப்பட்டு
காகிதங்களாக்கப்பட்டன.

நீ மட்டும் அன்று
விரல் தானம் செய்யாதிருந்தால்
இன்று எத்தனையோ புலவர்கள்
இறந்திருப்பார்களே!

உன் குழந்தைகளின் கண்களை
சாலையோரமாய் தோண்டி விற்க
கூலியாளை கூட்டி வருமே
கோடைகாலம்
அப்போது நீ மட்டும்
குழந்தை தானமிடாதிருந்தால்
எத்தனையோ கூலிகள்
வேலைதேடி
குடிபெயர்ந்திருப்பார்களே!

உன் வெள்ளை இரத்தத்தைக் குடித்து
உடலாலும் உணர்ச்சியாலும்
இன்புற்ற இனம்
உன்னை மறந்து
இன்று டாஸ்மாக் பார்களில்
உடலையும் உள்ளத்தையும்
ஆல்ஹகாலில்
எரித்துக்கொண்டல்லவா இருக்கிறது !

நுங்கு, பதநீர், பழம், கிழங்கு என
உன்னை உண்டு வளர்ந்த
எங்களின் சேவையை
நீ என்றாவது அனுபவித்ததுண்டா?

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.

## நட்பு

உயிரை உயிரால்
மதிக்கச் செய்வது நட்பு
மழையில் நனைந்த மகிழ்ச்சியை
இரசிக்கும் நட்பு
நீ என்னிடம் பேசியதை விட
எனக்காகப் பேசியதில் தான்
உணர்ந்தேன்
நம் நட்பின் பெருமையை
உன்னுடன் நடக்க
ஆரம்பித்த பின்புதான்
உதிரும் பூக்களின் மௌனத்திலும்
இசை கேட்க ஆரம்பித்தேன் நண்பா
தாய்மைக்கான விதை
நட்பில் இருக்கிறது.
எனக்குத் துன்பங்கள்
ஏற்பட்ட காலத்தில்
நீ அடிமரமாய் விளங்கினாயே
என் நண்பா
நீ என் அப்பாவாகவும்
என் அம்மாகவும்
என் சகோதரனாகவும்
என் துன்பத்தில் பங்கு கொண்டாயே
என் நண்பா
என் சகோதரனாக
என் நடவடிக்கைகளைக் கவனித்து
என்னை வழிநடத்தினாயே என் நண்பா
என் தாய் என்னை பெற்று எடுத்தாள்
ஆனால்,
நீ
என் தாயின் மறுபிறவியாய் பிறந்து
எனக்குத் துணை நின்றவன் நீயே!

**G. Sowmiya,**
II B.Sc (Maths) - A

## இயற்கை

மழைமேகம் கதிரவனை மறைத்திருக்க
சற்று முன் பெய்த மழை நீர்
மரங்களில் தங்கி நிற்க
பூக்களின் வாசமும்
சாரலின் ஈரமும்
காற்றில் நிறைந்திருக்க
அந்தமென்காற்றும்
என் நாசியைத் தழுவும்.
வளைந்து செல்லும் செம்மண்
சாலையின் இருபுறமும் பசும்புற்கள்
கம்பளமாய் விரிந்திருப்பதைக் கண்டு
கடிகார முள்ளை விட
மெதுவாய் நடக்கிறேன்.
தென்றலில் கலந்த மண்வாசம்
என் மனதைக் கட்டிப்போடுகிறது.

**செ. சௌந்தர்யா**
இளங்கலை இரண்டாமாண்டு கணினி
அறிவியல்.

## அன்புள்ள அம்மா

என் உடலுக்கு உயிர் தந்தவள் நீ
என்னைத் தாலாட்டி வளர்த்தவள் நீ
உண்மையான பாசத்தின் உருவம் நீ
என்னையே உலகின் அழகான
குழந்தை என்று எண்ணுபவள் நீ
உன் துன்பங்களை என்
இன்பத்திற்காய் மறந்தவள் நீ
என் சோர்வுகளை அகற்றி
அருகிலிருந்து தைரியம் ஊட்டும்
அன்புத்தோழி நீ
உண்மையான உறவின் அர்த்தம் நீ
என் சிரிப்பில் தன் கஷ்டங்களை
மறந்தவள் நீ
எனது மூன்றெழுத்து உலகம் "அம்மா"!

**செ.யுவராணி**
இளங்கலை வணிக மேலாண்மை
இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## வெற்றியின் ரகசியம்

வாழ்க்கையில் சாதிக்க நினை
கோபத்தைக் குறை
ஆசையை மற
தீய எண்ணத்தை அழி
நல்லதை நினை
புத்தியைத் தீட்டு
அமைதியைக் கடைபிடி
ஆர்வத்தை அதிகமாக்கு
தன்னம்பிக்கையைக் கூட்டு
தூக்கத்தை விட்டு விடு
விடாமுயற்சியை விட்டுவிடாதே
எந்த நிலையிலும் பின்வாங்காதே
கடமைக்குச் செய்து
கடலைப்பார்ப்பதை விட
கடமையைச் செய்து
கடலின் ஆழத்தைப் பார்
வெற்றி உன்பக்கம்,
தோல்வி எதிர்ப்பக்கம்.

**மு.ஷயன்ஷா**
II B.Sc (EC)

## நான் நேசித்தவை

மரத்தை நேசித்தேன் பழங்கள்
கிடைத்தன
மலரை நேசித்தேன் தேன் கிடைத்தது
இரவை நேசித்தேன் நிழல் கிடைத்தது
தாயை நேசித்தேன் அன்பு கிடைத்தது
தந்தையை நேசித்தேன்
அரவணைப்பு கிடைத்தது
கஷ்டங்களை நேசித்தேன்
உறுதி கிடைத்தது
வலியை நேசித்தேன்
தெளிவு கிடைத்தது
தோல்வியை நேசித்தேன்
வெற்றி கிடைத்தது.

E.Narmatha. II - B.Com.

## குழந்தையின் ஆசை

நீ பார்க்கும் போது
பேச நினைக்கிறேன்
நீ சிரிக்கும் போது
ஒன்றை சொல்ல நினைக்கிறேன்
நீ என்னை முத்தமிடும் போது
உன்னுடன் உரையாட நினைக்கிறேன்
முடியவில்லை.
கடவுளே சீக்கிரம் எனக்கு
பேசக் கற்றுக்கொடு
"அம்மா" என்றழைக்க.

M.Soundharya, I B.Com.

## நட்பு

இன்னொரு ஜென்மம்
பிறக்கப் போவதில்லை
நீயும் நானும் பேச
இருக்கும் நாட்களே நமக்குச் சொந்தம்
தொலைவில் இருந்தாலும்
தொடரட்டும் நம் நட்பு.

## அந்த நாட்கள்

பூந்தோட்டமாய் இருந்து பூக்களாய்
மணம் வீசிக்கொண்டிருந்த
அந்த நாட்கள்
வாசம் என்னும் மழையில்
நனைந்த தென்றலாய் இருந்த
அந்த நாட்கள்
அன்பு என்னும் மழை பொழிந்து
முத்துப்போல ஒளிவீசிய
அந்த நாட்கள்
பறவைகள் போல மகிழ்ச்சியாய்
அந்த நாட்கள்
கனவுகளை நனவுகளாக்கி
வெற்றியோடு திரிந்த
அந்த நாட்கள்
அத்தனை நிகழ்வுகளையும்
என் வாழ்க்கையில் சிந்திக்க வைத்தது
என் பள்ளி நாட்கள் மட்டுமே.

**இ. நர்மதா.**
இளங்கலை இரண்டாமாண்டு
வணிகவியல்.

## இமை

கண்ணிரண்டும் பேசும் உண்மையை
மூடி மறைத்தாய்
தூசு என்ற பகைவனைத்
தடுத்து நிறுத்தினாய்
துக்கத்தில் மூடி ஆறுதல் கூறினாய்
நீ நல்லவனா? கெட்டவனா?

**சு.விஜய சரவணன்,**
வணிகவியல் முதலாண்டு.

கண்ணுக்குத் தெரியும்
மனிதரை மதிக்காது
கண்ணுக்குத் தெரியாத
கடவுளிடம் மண்டியிடுகிறான்
மனிதன்

M. சௌந்தர்ராஜ், I-B Com.

## வலி

ஒரு நாள் நீ நானாக வேண்டும்
நான் நீயாக வேண்டும்
அன்று புரியும்
உனக்கு
எனது வலி.

S.பழனிசாமி, I-B Com.

## மனிதன்

பலியிடத் தயராக இருந்த
ஆடுகள் பேசிக்கொண்டன,
கவலைப்படாதே
இவர்கள்
தொழுவத்தில் பிறந்த
கடவுளையே கொன்றவர்கள்...!

## சோம்பேரி

தோழர்களே,
கடிகாரத்திடம்
போட்டியிடாதீர்கள்
ஏனெனில் - அது
நொடிக்கொருமுறை
ஓய்வெடுக்கிறது.

## பார்த்து நடங்க...

இன்று நீங்கள்
எட்டி உதைக்கும் கால்
நாளை உங்களைத்
தட்டி விடலாம்...!

**பு.கமலக்கண்ணன்**
இளங்கலைத் தமிழ் - முதலாமாண்டு

## நண்பன்

நீ என் நண்பன் என்று
தெரிந்திருந்தால்
பிறக்கும் போது கூட
அழுதிருக்க மாட்டேன்
நான் பிறக்கும்போது
நண்பன் என்று யாருமில்லை
இறக்கும்போது
நண்பனைத் தவிர யாருமில்லை.

**க.கார்த்திக்,**
முதலாண்டு உயிர்வேதியியல்

## நேர்மை

உண்மையில் நீ நல்லவன் என்றால்
தனிமையில் நீ நல்லவனாய்
இருப்பாய்.

## நண்பன்

அலைபாயும்
என் கண்கள் அறிவதில்லை
நீ ஊரில் இல்லை
என்ற உண்மையை

## நட்பு

என்னோடு பழகிப் பழகி இந்தக்

கடிகார முட்களும் பழகி விட்டன
நீ இருக்கும் போது வேகமாய்
நகர்வதும்...
நீ இல்லாத போது மெதுவாய்
சுழல்வதும்

**மீனா**
நுண்ணுயிரியல் துறை-இரண்டாமாண்டு

## வாழ்க்கைப் பாதை

காலம் என்னும் காகிதத்தில்
வரைந்தேன்
வாழ்க்கை என்னும் ஓவியத்தை
வண்ணம் தீட்டுவதற்காக அல்ல,
எண்ணம் தீட்டுவதற்காக,
நீர்பட்டு அழிவதற்காக அல்ல – பிறர்
கால்பட்டு பாதையாக உருவாவதற்காக.

## உழவனின் நண்பன்

எருது இழுக்கிறது ஏர் கலப்பை
போக்குகிறது உழவனின் களைப்பை
பெருக்குகிறது உழவனின் உழைப்பை
எனவே போடுகிறேன் இக்கவிதையின்
தலைப்பை
“உழவனின் நண்பன்”

## விவசாயம்

நாட்டின் முதுகெலும்பு விவசாயமா?
விவசாயிகளின் இரத்தத்தின் சாயமா?
அவர்கள் வயலில் நீர் பாயுமா?
வறுமைதான் ஓயுமா?

இதற்கு நாடு என்ன பதில் சொல்லப்

போகிறது?
நாம் என்ன செய்யப் போகிறோம்?
முதுகெலும்பு முடங்கிவிட்டால்
மூங்கில்கூட
முளைக்காது இம்முத்திருநாட்டில்.

## கல்வி

ஆகிவிட்டது வியாபாரம்

அப்பாவி ஏழைகளுக்கோ
தலையில் பாரம்
கடந்து செல்லும் பாதை தூரம்
கடனை செலுத்துகிறார்கள் வாராவாரம்
கல்வி நிறுவனங்களுக்கோ ஆரவாரம்

***பா.பிரியதர்ஷன்,***
*இளங்கலைத்தமிழ் முதலாமாண்டு*

## உன் பிறந்த நாள்

செடியில் உள்ள மொட்டுகள்
இதழ் விரிப்பது போல
அழகாக
வண்ணத்துப் பூச்சிகளைப் போல

மகிழ்ச்சியாக
பன்னீர் துளிகளைப் போல
கண்ணீர் துளிகளோடு
உலகைச் சந்திக்க வந்த இனியநாள்
உன் பிறந்த நாள்.

**அ.ஜெனித்தா**
முதாலாமாண்டு-பிசிஏ-டி

## நண்பன்

“அன்பு என்பது மூன்றெழுத்து
அதில் குடியிருப்பவள் - அம்மா
பாசம் என்பது மூன்றெழுத்து
அதில் குடியிருப்பவர் – அப்பா
பண்பு என்பது மூன்றெழுத்து
அதில் குடியிருப்பவர் – ஆசான்
பக்தி என்பது மூன்றெழுத்து
அதில் குடியிருப்பவர் - இறைவன்
காதல் என்பது மூன்றெழுத்து
அதில் குடியிருப்பவர் – கணவன்
நட்பு என்பது மூன்றெழுத்து
அதில் நானும் என் தோழியும்”

**G.சந்தியா**
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## நட்பு

நீ என் நண்பன் என்று
தெரிந்திருந்தால்
பிறக்கும் போது கூட
அழுதிருக்க மாட்டேன்
நான் பிறக்கும்போது
நண்பன் என்று யாருமில்லை
இறக்கும்போது
நண்பனைத் தவிர யாருமில்லை.

**க.கார்த்திக்,**
முதலாண்டு உயிர்வேதியியல்

## தாயின் துன்பம்

அன்று நீ வயிற்றில்
உதைத்த போது
வலிக்கவில்லை மகனே –ஆனால்
இன்று உதைத்தபோது
வலிக்கிறது மகனே
அன்று உன்னை பெற்று
எடுக்க சிந்திய கண்ணீரை
துடைத்துவிட்டேன் - ஆனால்
இன்று உன்னை பெற்று
எடுத்ததால் சிந்திய கண்ணீரை
என்னால் துடைக்க முடியவில்லை
மகனே.

**சு.சுரேகா**
தமிழிலக்கியம்-இரண்டாமாண்டு

## ஆசிரியர்

என்னை ஈன்று எடுத்த தாய்
ஒரு நாள் மட்டும்
வலியை உணர்ந்தாள்
என் ஆசிரியர் தினம் தினம்
வலியை உணர்கிறார்
வகுப்பில் பாடம் எடுக்கும்போதும்!
எங்களை வழி நடத்தும்போதும்!

**பொ.மேகலா**
தமிழிலக்கியம் - இரண்டாமாண்டு

# சிறுகதை

## அரசர் பெரியவரா? கடவுள் பெரியவரா?

அரசர் தனது அவையிலே அமர்ந்திருந்தார். சபையில் அமர்ந்திருந்த அறிஞர்களை நோக்கி 'அறிஞர் பெருமக்களே! நான் பெரியவனா? கடவுள் பெரியவரா? என்ற ஐயம் என் மனதில் எழுந்துள்ளது. இந்த வினாவுக்குத் தக்க காரணத்துடன் பதில் சொல்லுங்கள்"என்றுகேட்டுக் கொண்டார்.

அரசனை விட கடவுள் பெரியவர் என்பதை சொல்லவே தேவையில்லை, ஆனால் அரசர் கோபித்துக்கொள்வாரே என எண்ணி மற்றவர்கள் மௌனமாக இருந்தார்கள். சபையில் ஒரு அமைச்சர் மட்டும் எழுந்து நின்றார். உமது கருத்து என்ன? என அரசர் கேட்டார். அரசரே இந்த விசயத்தில் சந்தேகத்துக்கு என்ன இடம் இருக்கிறது? கடவுளைவிடத் தாங்கள்தானே பெரியவர்? என்றார்.

அரசருக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அமைச்சரே உமது கூற்றைத் தக்க காரணத்துடன் விளக்கும் என்றார் அரசர்.

அரசர் அவர்களே! என்னைத் தங்களுக்கு பிடிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே என்னை நாடு கடத்திவிடத் தங்களால் முடியும்! ஒருவனை கடவுள் எங்கே விரட்டியடித்தாலும் அவன் கடவுளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில்தானே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க முடியும்? என்று கேட்டார் அமைச்சர்.

அமைச்சர் தனக்கு சரியான பாடம் கற்பித்து விட்டார் என்பதை அரசர் உணர்ந்தார். அமைச்சரின் கூற்றிலுள்ள உண்மையை உணர்ந்து அவருக்குப் பரிசுகளை வழங்கினார்.

**திரு ப.ராஜேஸ்**
தமிழ்-உதவிப்பேராசிரியர்

## முத்தம்மாள்

நேற்றிரவு முழுவதும் பெய்த மழையினால் பூமி குளிர்கின்றது. அதிகாலையில் இதமாக வீசும் மார்கழி வாடை முத்தம்மாளின் முகத்தைத் தழுவும் போது,கண்களை இமைகளால் இறுக மூடித்திறக்கிறாள். இமைகளின் பிணைப்பில் தோன்றும் சிறு வெப்பத்தில் முகம் மலர்கிறது. வாடைக்காற்றின் மென்மையான மோதலையும் பொருட்படுத்தாமல், அவளது இரு கைகளும் பச்சதண்ணியில் பாத்திரங்களை அலசுவதில் வேகம் காட்டுகின்றன. சில்வர் பாத்திரங்களின் உரசல்களும், அவளது வளையல்களின் மோதலும் எழுப்பும் விரைவு ஓசையில்,

வங்காரின் பசியும், காலை உணவிற்கான காத்திருப்பும் பிரதிபலித்துக் கொண்டேயிருந்தது.

முத்தம்மாள் பாத்திரங்களைக் கழுவியெடுத்து, சாப்பாட்டை சட்டியில் போட்டுக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் போய்ச்சேரும் போது, வங்காரு கடும் பசியில் இருப்பான். இவள் எவ்வளவு வேகமாகச் சென்றாலும், “இதான் சோறு கொண்டு வர்ற நேரமா?” என்னும் அவனின் முறைப்பை தவிர்க்க முடியாது. அது அவனது இயல்பு.அதை தலைகவிழ்ந்த புன்னகையாலும், சிறு மௌனத்தாலும் எதிர்கொள்ள முத்தம்மாளும் பழகிவிட்டாள்.

வங்காரு இந்த மூன்றரை வருஷமாகத்தான் குக்கர், மிக்சி, ஸ்டவ் அடுப்பு போன்ற சமையல் கருவிகளை பழுதுநீக்கும் வேலை செய்து வருகிறான். அதற்கு முன்பு எந்த வேலையும் பார்க்காமல், தனது பத்தாம் வகுப்பு படிப்பை, டாக்டர் பட்டமாக நினைத்து வரட்டுக் கௌரவத்தோடு ஊருக்குள் வலம் வந்துகொண்டிருந்தான். இப்போது, தினமும் காலையில் ஆறு மணிக்கெல்லாம் சைக்கிளில், பழுது நீக்கும் உபகரணங்கள் அடங்கிய பெட்டியை எடுத்து மாட்டிக்கொண்டு, தன் கிராமத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள டவுனுக்குப் போயிடுவான். அங்கு, ஜவுளிக்கடைத் தெருவிலிருந்து பிரியும் குறுகலான சந்தில் ஒரு பெட்டிக்கடை போட்டிருக்கிறான். ஒன்பது மணி வரைக்கும் அங்கு உட்கார்ந்து சமையல் கருவிகளை பழுது நீக்கும் வேலை செய்து கொண்டிருப்பான்.

முத்தம்மாள் சாப்பாடு கொண்டு வந்ததும் சாப்பிட்டுவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு தெருவிற்குள் சென்றுவிடுவான். தெருவில் போகும் போது, ஸ்டவ் அடுப்பு ரிப்பேர்... மிக்சி ரிப்பேர்... என்று கூவிக்கொண்டே போவான். தெருவில் கூவிக்கொண்டு போகும் போது, வீட்டிற்குள்ளிருந்து பெண்கள் யாராவது அவனையோ, அவன் சைக்கிளையோ உற்றுப் பார்த்தால், உடனே, “எம்மா, வீட்ல மிக்ஸி, குக்கர், எதுவும் ரிப்பேர் பார்க்கனுமா?” என்று ஆவலாகக் கேட்பான். அப்பொழுது அவனது குரல் மிகவும் பவ்வியமாக இருக்கும். காலைச் சாப்பாட்டிற்குப் பிறகும், மதியச் சாப்பாட்டிற்குப் பிறகும் இப்படி தெருவிற்குள் பழுதான சமையல்பொருள்களைத் தேடிச்சென்று வாங்கி வருவான்.

முத்தம்மாள் காலையில் கடைக்கு வரும்போதே இருவேளை உணவையும் இருவருக்கும் சேர்த்தே கொண்டு வந்துவிடுவாள். வங்காரு கடையில் இருக்கும் போதும், இல்லாத போதும் கடையைப் பார்த்துக்கொள்ள வேண்டியது முத்தம்மாளுடைய வேலை. ஒருசிலர் பழுதான பொருள்களை கடைக்கே கொண்டுவந்துவிடுவார்கள். அதனை வாங்கி வைப்பது, வங்காரு வந்தவுடன், அவன் இல்லாத போது கடைக்கு வந்த ஒவ்வொரு பொருளும் என்ன பிரச்சினைக்காக வந்திருக்கிறது என்பதை அவனுக்குச் சொல்ல வேண்டும்.

இந்த ஒன்றரை வருஷத்தில் முத்தம்மாளின் பொறுப்பான வேலைகளைப் பார்த்து, வங்காரு மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொள்வான்.ஏனென்றால் வங்காருவின் முதல் பொண்டாட்டி மரகதம், முத்தம்மாள் அளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவள் அல்ல. முத்தம்மாள் ஏழாவது வரை படித்திருப்பதால், கடன்களை விபரமாக நோட்டில் எழுதிவைப்பாள்.

வங்காரு நினைப்பது போல் மரகதம் மனக்கணக்கு போடுபவளாக இருந்தாலும் நாட்டுநடப்பு பற்றி ஓரளவு தெரிந்த விவரமான பெண். எழுதப்படிக்கத் தெரியாதவளாக இருந்தாலும் டிவி பார்ப்பதில் அவளுக்கு இருந்த ஆர்வம் உலக நடப்புகள் அனைத்தையும் அறிந்துகொள்ளச் செய்தது. அதுதான் பட்டறிவும் படிப்பறிவும் இல்லாத வங்காருக்கு, மரகதத்தின் மீது ஒருவகையான மனஸ்தாபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்திக்கொண்டே இருக்கும். இதையெல்லாம் விட வங்காருக்கும், அவனது தாய் முருகாயிக்கும் பெரிய அவமானமாக இருந்தது மரகதத்துக்கு பிள்ளைப்பேறு இல்லாதது."பிள்ளைப்பேறு இல்லாட்டி என்ன? உனக்கு நானும், எனக்கு நீயும் குழந்தைகள் மாமா"என்று வங்காருக்கு அடிக்கடி மனத்தைரியம் சொல்வாள் மரகதம். இந்தியா போன்ற ஜனத்தொகை மிகுந்த நாட்டில் குழந்தையில்லாமையே நினைத்து மகிழ்ச்சியடையத்தானே வேண்டும் ஏன் வருத்தப்படுகிறார்கள்? என்று மரகதம் தனக்குள்ளேயே பலமுறை கேட்டிருக்கிறாள். தங்கச்சி முத்தாத்தா சித்தாள் வேலை செய்து, தன் ரெண்டு பிள்ளைகளையும் படிக்கவைக்கப் படும் கஷ்டம், படிச்சிட்டு வேலையில்லாமல் பஸ்டாண்டிலும்

சாவடியிலும் பொழுதை கழித்துக் கொண்டிருக்கும் உள்ளூர் இளவட்டங்கள்,ஏழு பிள்ளைகள் பெற்ற பக்கத்து வீட்டுப்பாட்டி ராக்கம்மா, இன்று தன் ஒருவேளைச் சோத்துக்குத் தானே உலைவைக்கும் அவலம் என தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளைப் பற்றிக் கொஞ்சம் ஆழமாக மனதிற்குள் அசைபோடுவாள். இந்த அனுபவ அறிவின் மூலம் விளைந்தது தான் மரகதம் வங்காரிடம் அடிக்கடி சொல்வது.

ஆனால், மனைவியின் அறிவை மதிக்கும் மரபும் குணமும் குறைந்த சமூகத்தில் உருவான வங்காருக்கு, மரகதத்தின் மீது ஆழமான அன்பு கூட இருந்ததில்லை. கல்யாணம் முடிந்த ஒன்றிரண்டுவருடத்திலேயே மரகதத்தை ஒரு வேலையாள் போல் நடத்தினான். பின்னாளில், வங்காரு தன்னை கல்யாணம் கட்டிக் கொண்டதற்கான நோக்கத்தை, மரகதத்தால்எளிதில் யூகிக்க முடிந்தது.பூமியைத் தாயென்று அழைப்பவர்கள் மனைவியை உற்பத்திநிலமாகப் பார்க்கிறார்கள் என்று மனதிற்குள் நொந்து கொண்டிருந்தவள், பூக்குழியிலிருந்து (நெருப்புக்குழி) தப்பித்த புதுமலராய் தனித்துப்போனாள். அவளது அனுபவங்கள் நிறைய மாற்றங்களை உருவாக்கின. குறிப்பாக, மனத் துணிச்சல், சொந்தச் சம்பாத்தியத்தில் வாழ்வதற்கான ஊக்கம் என நிறைய முற்போக்குச் சிந்தனைகளை உள்வாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் வந்தது. அதனால், தனித்திருந்த காலங்களில் தன்னை அரவணைத்துக் கொண்ட ஒன்றுவிட்ட மாமன் மகனையே கட்டிக்கொண்டாள். இப்போது மதுரைக்கு அருகில் உள்ள சிற்றூரில் ஒரேஒரு குழந்தையுடன் அன்பான வாழ்க்கை வாழ்கிறாள்.

முத்தம்மாளின் பொறுப்பான வேலை அவளது வேலைப்பளுவை அதிகமாக்கியது. குழந்தை பெற்ற போது, ரெண்டு மாதம் கூட முழுமையாக ஓய்வெடுக்கவிடவில்லை. வேலைசெய்ய ஆளில்லை என்று தன் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டான் வங்காரு. போதாக்குறைக்கு வங்காருவின் தாயும் அவளது வேலைகளையும் சேர்த்துக் கவனிக்க வேண்டுமென்று முத்தம்மாளை நிர்பந்திக்கிறாள். வீட்டில் முத்தம்மாள் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் கூலி கொடுப்பதாக இருந்தால், வங்காரின் சம்பாத்தியம் ஒரு மூலைக்குக்கூடப் பத்தாது. இன்னேரம் அவன் கடன்காரனாக ஆகியிருப்பான்.

அவ்வளவு பொறுப்புகளை பொண்டாட்டி என்னும் உறவின் கடமையாக கட்டமைத்திருக்கிறது இந்தக் குடும்ப அமைப்பு.

காலையில் கொண்டுவந்த சாப்பாட்டை வங்காருடன் சேர்ந்து முத்தம்மாள் சாப்பிட்டாள். சனிக்கிழமையென்பதால் இன்று நிறைய பொருட்கள் ரிப்பேருக்கு வந்திருந்தன. எனவே வேலையை முடிக்க இரவு ஏழு மணியாகிவிட்டது. அதற்கப்புறம் இருவரும் சைக்கிளில் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.வீட்டுக்குப் போயிதான் சோறு பொங்கி சாப்பிட வேண்டும். சைக்கிள் வீட்டு வாசலை அடைந்த போது, வாசப்படியில் உட்காந்திருந்த முருகாயி, மகனின் சைக்கிள் ஈரமுற்றத்தில் கிழித்துச்சென்ற கோடுகளைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தாள்.

ம்ஹூம்...வீட்டுக்கு வர்ற நேரமா, மூணு நாளாச்சேர்ந்த அழுக்குத் துணியை யாரு துவைக்கிறதாம்?

மஹாராணியாட்ட வண்டிலதான் வருவாகளாக்கும், வாழவந்தவ வெள்ளனத்திலேயே வந்து வீட்டுல என்ன வேலை கிடக்குன்னு பாக்கவேணாமா? ம்... பாரு வீட்ல எல்லாமே அப்டிஅப்டியேக் கிடக்கு...

சைக்கிளிலிருந்து இறங்கிய முத்தம்மாள் காதை காற்றால் மூடிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஏழுமணி வரை கடையில் வேலை செய்தது உடம்பெல்லாம் நோவெடுக்க, கொஞ்சம் தலைசாய்க்கலாம்னு புள்ளையை நெஞ்சோடு அனைத்துக் கொண்டு கட்டிலில் கொஞ்சம் கண் அயர்ந்தாள்.

முருகாயியின் குற்றப்பத்திரிக்கை நீண்டு கொண்டிருந்தது.

வங்காரு செவிடன் போல் தன்மாலை நேரக் காரியங்களில் இறங்கிவிட்டான்.

‘இது எப்பவும் நடப்பதுதான்’ என்று கண் அயர்ந்த முத்தம்மாளின் செவியில் முருகாயியின் குரல் ஓங்கி ஒலிக்கத்தொடங்கியது. தன்னை அவள் நெருங்கி வருகிறாள் என்று முத்தம்மாளுக்கு உணர்த்தியது.

தன் கையில் கொண்டுவந்த அழுக்கு மூட்டையை முத்தம்மாளுக்கு எதிரில் போட்டுவிட்டு,“கொண்டா புள்ளையை, உலை வைக்கிறதுக்குள்ள இந்த அழுக்குத் துணியையெல்லாம் துவைச்சப்போடு”என்று வெடுக்கென்று பிள்ளையை முத்தம்மாளிடமிருந்து பிடுங்கினாள் முருகாயி.

தாயின் வாசனையையே தன் சுவாசமாகக்கொண்ட பச்சிளங்குழந்தை வீர்வீரென்று அழ ஆரம்பித்தது.

திடுக்கிட்ட முருகாயி அப்படியே நின்றால், குழந்தையின் அழுகுரல் கேட்டு வந்த வங்காரும் முருகாயியை வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தான். அசதியின் பிடியிலிருந்து எழுந்து தன் மகனை முருகாயிடமிருந்து திரும்ப வாங்கினாள் முத்தம்மாள். அழுகுரல் ஆனந்த யாழானது. நெஞ்சில் அணைத்து, சிறிது நேரத்திற்கு முன் அவன் கண்களில் தேங்கி வழிந்த கண்ணீரின் தடத்தை உற்று நோக்கினாள். அப்போது முத்தம்மாளின் கண்ணில் தோன்றிய மலர்ச்சி, அவனை ஈன்ற பொழுதை விட பிரகாசமாக இருந்தது.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.

## பேராசை பெருநட்டம்

அன்று ஒருநாள் மணி என்பவர் லாட்டரி டிக்கெட் கடைக்காரரிடம் பெற்றுக் கொண்டார். இவர், ஒருவேளை பரிசுத்தொகை நம்க்குக் கிடைத்தால் எந்தெந்தப் பொருள் வாங்கலாம் என்று கனவு கண்கிறார். அவர் கனவில் பரிசுத தொகையைப் பெற்றுவிட்டார். அதன் பிறகு அதைக் கொண்டு பெரிய வீடுகளையும், பல வாகனங்களையும் வாக்குவது போல் காட்சிகள் வந்து போகிறது. இதெல்லாம் கனவு வாழ்வில் மட்டுமே சாத்தியமாகும். ஏனெனில் நிஜ வாழ்வில் மணி மிகப்பெரிய சோம்பேறி. வேலைக்குச் செல்லாமல் பொழுதைக் கழிக்கக் கூடியர். லாட்டரி முடிவைத் தெரிந்து கொள்ள காலையில்; செய்தித்தாளை வாங்கிப் தன்னுடைய எண்ணைத் தேடுகிறார். அங்கு அவர் வாங்கிய சீட்டின் எண் இல்லை. ஆகவே முடிவு இவருக்கு சாதகமாக அமையவில்லை. இவரது பேராசை பெரும் ஏமாற்றத்தில் முடிந்தது. இவர் நேரத்தைக் கழிக்காமல் உழைத்திருந்தால் கூட ஒருவேளை அந்த பரிசுத்தொகை இவருக்கு கிடைத்திருக்க வாய்ப்பு இருக்கலாம். எனவே பேரசைபடாதீர்கள் பெருநட்டமாக மாறி விடும்.

**கா.சுபாஷினி**
நுண்ணுயிரியல் துறை - இரண்டாமாண்டு

## சுதந்திரத்தின் சுகம்

ஒருநாள் ஒரு குதிரை தன் எஜமானன் பூட்டியிருந்த விலங்கிலிருந்து விடுபட்டு ஓடிச் சென்றது. அது நேரே மேற்கு நோக்கி ஓடிச் சென்றது. வழியில் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அதைக் கடப்பதற்கு தெரியவில்லை அந்தக் குதிரைக்கு. அது தனது கண்களுக்கு எட்டக்கூடிய தூரம் வரையில் பார்த்தது. ஆனால் பசுமையே தென்படவில்லை.

என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறி அப்பாவிக் குதிரை சோர்வடைந்தது. பசியின் காரணத்தால் குரல் கூட தன்னால் சரிவர எழுப்ப இயலவிலை. நீரைத் தவிர வேறொன்றுமில்லை. நான்கைந்து நாட்கள் சென்றது. குதிரை ஆற்றைக் கடக்க இயலாமல் பரிதவித்தது. இதைப் பார்த்து காகம் இரக்கம் கொண்டது. குதிரையிடம் வந்த காகம், 'நான் பறக்கும் திசையை நோக்கி வா' எனக் கூறிப் பறந்தது. குதிரை காகத்தைப் பின்தொடர்ந்தது. காகம் பசுமையாக இருக்கக் கூடிய வயல்வெளியை அடைந்தது. குதிரை காகத்திற்கு நன்றி சொல்லியது. மனிதர்கள் இவ்விடத்திற்கு வருவார்களா? என்று கேட்க நினைத்த குதிரையின் நினைவுகளைப் புரிந்து கொண்ட காகம் சிரித்து விட்டுச் சொன்னது மனிதர்கள் இல்லாமல் பசுமையான வயல்வெளி உருவாகுமா? எனக் கேட்டது. அதற்கு குதிரை அப்படியானால் நான் இங்கேயே இருந்து விடுகிறேன் எனக் கூறியது.

**கருத்து:** அடிமை வாழ்வில் கனவில் கூட இன்பம் இல்லையன்றோ!

**ஜெ.தயா பிங்கி**
நுண்ணுயிரியல் துறை - இரண்டாமாண்டு

## பொறுமைக்கு கிடைத்த பரிசு

ஒரு ஊரில் கடுமையான பஞ்சம் நிலவியது. மக்கள் உணவுப் பற்றாக்குறையால் தவித்தனர். ஊரில் உள்ள செல்வந்தர் ஒருவர் அங்குள்ள குழந்தைகளுக்கு ஒருவேளை மட்டும் ரொட்டித்துண்டுகளை இலவசமாக வழங்கினார். அந்தக் குழந்தைகள் போட்டிபோட்டுக் கொண்டு அந்த ரொட்டிகளை எடுத்துச் சாப்பிடுவது வழக்கம். செல்வந்தர் ரொட்டித் துண்டுகளைக் கொடுக்கும் போதெல்லாம் ஒரு சிறுமி மட்டும் அனைவரும் எடுத்த பிறகு எஞ்சிய ரொட்டியை எடுத்து உண்பாள். இதைப் பலநாட்கள் கவனித்த செல்வந்தர் ஒருநாள் சிறுமியை மட்டும் தனியாக அழைத்து பெரிய ஒரு ரொட்டியைத் தந்தார். அச்சிறுமி அந்த ரொட்டியை வீட்டிற்கு எடுத்துச் சென்றது. பிறகு அந்த ரொட்டியைச் சாப்பிட நினைத்து உடைக்கும் போது அதில் ஒரு தங்கக் கட்டி இருப்பதைப் பார்த்து சிறுமியும் அவளது தாயாரும் அசிர்ச்சியடைந்தார்கள். சிறுமியின் தாய் அத்தங்கக் கட்டியினை சிறுமியிடம் கொடுத்து உடனே அச்செல்வந்தரிடம் கொடுக்குமாறு கூறினாள். சிறுமியும் செல்வந்தரிடம் சென்று அத்தங்கக் கட்டியை திருப்பிக் கொடுத்தாள். உடனே செல்வந்தர் இத்தங்கக் கட்டி உன் பொறுமைக்கு நான் அளித்த பரிசு. ஆகவே இது உனக்கே சொந்தம் என்றார்.

**சி.பிரேம்குமார்**
நுண்ணுயிரியல் துறை - இரண்டாமாண்டு

கட்டுரை

## மேழி பிடிக்கும் கை வேளாளனின் கை

ஜனநாயகம், சமதர்மம், பொதுவுடைமை என்பவை சமீபத்தில் உருவானவை. முன்பெல்லாம் அரசனை ஒரு தெய்வமாகவே எந்த நாட்டிலும் பாவித்து வந்திருக்கிறார்கள். திருமாலின் அம்சமே அரசன் என்று கூட நம் நாட்டில் கருதினார்கள். ஆனால் அரசனைக் கண்டித்து அவனுக்கு நற்புத்தி புகட்டிய புலவர்களும் இருந்திருக்கின்றார்கள். அவர்களும் தமிழ் நாட்டில்தான் அதிகமாக இருந்திருக்கிறார்கள். புலவர்களை இவ்வாறு வேறு எங்குமே அரசர்கள் கௌரவித்ததில்லை. அவ்வாறு கௌரவிக்கப்பட்ட புலவர்களும் அரசனை விடப் பெரியவன் ஒருவன் அந்த ராஜ்யத்தில் இருப்பதாகச் சொன்னதும் கிடையாது.

விதிவிலக்காக இரண்டொரு கவிஞர்கள் தான் அரசனை விட அறிவாளி, பெரியவன்என்று சொல்லியிருக்கிறார்கள். கம்பரோ, குடியானவன்தான் எல்லோரையும் விடப்பெரியவன் என்றார். கலப்பை பிடித்து உழும் அவன் கையைப் பார்த்துதான் அரசர்கள் வாழவேண்டும். அவன் மேழி பிடிக்காவிட்டால் அரசனும் இல்லை, அரசாங்கமும் இல்லை, தேசமுமே வாழமுடியாது என்றார். ஆகவே குடியானவன் கையில்தான் நாட்டை ஆளும் ஆக்கினாச்சக்கரமே இருக்கின்றது. அவன்தான் உலகுக்கு அருள்செய்து உணவூட்டிக் காப்பாற்றுகிறான். ஜனங்களுக்கு ஏற்படும் உணவுப்பஞ்சம், துணிப்பஞ்சம் போன்ற கஷ்டங்களையெல்லாம் அவன் கையே போக்குகின்றது. அவனுடைய கைத் தொழிலுக்கு எந்தக காலத்திலும் அழிவில்லை ஊழிக்காலத்திலும் காப்பாற்றும் கை, வேளாளனின் கைதான் என்று பாடினார் கம்பர்.

இதனை,

மேழி பிடிக்கும் கை
வேல்வேந்தர் நோக்கும் கை
ஆழி தரித்தே
அருளும் கை – சூழ்வினையை
நீக்கும் கை, என்றும்
நிலைக்கும் கை, நீடுழி
காக்கும் கை, காராளர் கை.

என்ற தனிப்பாடலில் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார். உழைப்பாளர் உள்ள நாடே உயரும் என்பதை தற்காலமும் உணர்த்துகின்றது. கம்பரின் தனிப்பாடல்கள் காலங்காலமாக நிலைத்து நிற்கக் காரணம் அவரது கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்தி வருவதாகும்.

**முனைவர் இரா.தேவணன்**
தமிழ்-உதவிப்பேராசிரியர்

## புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முக்கியம்

ஒரு ஊரில் கண்பார்வை இல்லாத ஒருவர் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். அவர் தினமும் “கடவுளே என்னை இப்படிப் படைத்து விட்டாயே... உனக்கு கண் இல்லையா? தினமும் நான் கஷ்டப்படுகிறேனே..” என்று புலம்பியபடி கடவுளைத் திட்டிக் கொண்டேயிருந்தார்.

அவனது திட்டுப் பொறுக்க முடியாமல் கடவுள் ஒரு நாள் அவன் முன் தோன்றி ‘நான் கடவுள் வந்திருக்கிறேன் உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். ஆனால் ஒரு நிபந்தனை ஒரே ஒரு வரம் மட்டும்தான் கேட்க வேண்டும் என்றார்.

பார்வையற்றவரும் அதற்கு ஒப்புக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார். பின்பு சிறிது நேரம் யோசித்து கீழ்க்கண்ட வரத்தைக் கேட்டார்.

“ராஜவீதியில் தங்கத் தேர் ஓட்டி விளையாடுபவனைப் பெற்றத் தாய் வெள்ளிக் கிண்ணத்தில் பால்சோறு ஊட்டுவதை என்னுடைய வீட்டின் எட்டாவது மாடியிலிருந்து நான் பார்த்து மகிழ வேண்டும்”

இந்த வரத்தில் பார்வை இல்லாதவன், தனக்கு பார்வை வேண்டும், ராஜயோக வாழ்க்கை வாழ வேண்டும், நூறாண்டு வாழவேண்டும், ஏழுமாடி வீடு வேண்டும் என்பதையெல்லாம் ஒரே வரத்தில் கேட்டு விட்டான்.

அவனுடைய புத்திசாலித்தனமான பதிலைப் பாராட்டிய கடவுள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார். புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முன்னேற முக்கியம்தான் என்பது உண்மைதானே? நண்பர்களே மீண்டும் சந்திப்போம்.

**மு.சதீஸ்குமார்**
தமிழ்-உதவிப்பேராசிரியர்

## மனித இனமே எங்கு செல்கிறாய்

“தேடிச் சோறு நிதம் தின்று” என்று பாரதியின் வரிகளே முதலில் நினைவுக்கு வருகின்றது. இந்த மனித இனம் இன்றைக்கு எங்கே சென்று கொண்டிருக்கிறது. ஒரு மனிதனுக்கு தன் இனத்தை சேர்ந்த மற்றொரு மனிதனையே காப்பாற்ற விரும்பாத நிலை இன்றைக்கு. எங்கு நோக்கினும் போட்டிகள், பொறாமைகள், குற்றங்கள் அடேங்கப்பா! இன்றைக்கு கல்வி என்பது அறிவு சார்ந்த விடயமாக அன்றி காசு, கௌரவம், போட்டிகள் நிறைந்த வியாபாரமாகிவிட்டது. அறிவிற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறி வீண் மதிப்பெண்களுக்கு மட்டுமே மதிப்புகள் இன்றைக்கு. அடுத்ததாக பெண்கள் நம் நாட்டின் கண்கள் என்று வெளியே கூறிக்கொண்டாலும் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள்

பல. இன்று எங்கு நோக்கினும் அடேங்கப்பா இது வெளிநாடா இல்லை நம்நாடா என்ற வியப்பு. அத்தனையும் வீண் ஆடம்பரங்கள். அங்கே இந்திய எல்லையில் பல உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கும் சமயத்தில் நாம் இந்திய அணி வெல்லுமா? பாகிஸ்தான் அணி வெல்லுமா? என நாம் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே எல்லையில் இறந்து கொண்டிருக்கும் உயிர்கக்கு மதிப்பே இல்லையா?

மனித மனம் ஒரு குப்பைத்தொட்டி போன்றது. அதைக் கவிழ்த்து வையுங்கள் இல்லையேல் தீய எண்ணங்களைக் கொண்டு வந்து பிறர் கொட்டிவிடுவார்கள். இங்கே நடக்கும் பல குற்றங்களுக்குக் காரணம் நீயா! நானா என்று யோசிப்பதை விட நீயும் நானும் தான் என்று எண்ணி வருத்தப்படு, அதை சரி செய்ய வழியும் தேடு,. உன் தேடல் ஒரு மாற்றாமாக அமையட்டும். பிறருக்காக நல்லவனாக நடிப்பதை விட்டுவிடு. அதற்கு நீ தீயவனாக இருப்பதே மேல். தன்னை விட இந்த உலகில் எவரும் நல்லவரில்லை என்று எண்ணாதே. அவர்களிடம் உள்ள ஒரு குணம் உன்னிடம் இல்லாமல் போகலாம். இவ்வுலகில் உன்னைப் போல நடந்து கொள்ள உன்னால் மட்டுமே முடியும். எனவே நீ அசலாக இருக்கக் கற்றுக்கொள். காட்டுவாசிகளுக்கும் நகரவாசிகளுக்கும் ஒரே வித்தியாசம் தான். அவர்கள் விலங்குகளை வேட்டையாட நினைக்கிறார்கள். இவர்கள் மனிதர்களை வேட்டையாட நினைக்கிறார்கள்.

**அ.ரம்யா**

நுண்ணுயிரியல் துறை - இரண்டாமாண்டு

# பொது அறிவு

## International Day of the October

**1 October:**

International Day of Older Persons

**2 October**:

International Day of Non-Violence

**5 October**: World Teachers' Day

**5 October** (first Monday in October): World Habitat Day

**9 October**: World Post Day

**10 October**: World Mental Health Day

**11 October**:

International Day of the Girl Child

**13 October**: International Day for Disaster Reduction

**15 October:**

International Day of Rural Women

**16 October**: World Food Day

**17 October**: International Day for the Eradication of Poverty

**24 October**: United Nations Day

**24 October**: World Development Information Day

**27 October**:

World Day for Audiovisual Heritage

**31 October**: World Cities Day

## அரிய வினாவும் விடையும்

1. அகரத்தில் தொடங்கி நகரத்தில் முடியும் நூல்கள்?

இறையனார் அகப்பொருள், திருக்குறள்

2. மாதானுபங்கி என்பதற்குப் பொருள்?

தாய்க்கு நிகராக இருப்பவன் என்று பொருள் -திருவள்ளுவர்.

3. முடிவேந்தர் மூவருக்கும் உரிய சிறப்பான மலைகள்?

சேரன் - கொல்லிமலை

சோழன் - நேரிமலை

பாண்டியன் - பொதியமலை

4. முத்தி நகர் ஏழு?

அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, வாரகை

5. மூன்று காலையுடைய தேவர் யார்?

ஜீர தேவதைக்கு மூன்று கால்கள் உண்டு; முனிவர்களில் பிருங்கி முனிவர் மூன்று கால்களை உடையவர் ஆவார்.

6. பூஞ்சியத்திற்கு தமிழில் என்ன பெயர்?

பாழ் என்று பெயர்; பரிபாடலில் அந்தச் சொல் ஆளப்படுகிறது.

7. காவற்பெண்டு என்பது யாரைக் குறிக்கும்?

செவிலித்தாயைக் குறிக்கும்.

8. ஒன்பது தீர்த்தங்கள் எவை?

கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை, சரஸ்வதி, காவேரி குமரி, பாலாறு, ஸரயு.

9. பஞ்ச சீலம் என்பவை எவை?

கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, காமமின்மை, இரவாமை

10. கங்கை எங்கே தோன்றியது?

இப்போது இமாசலத்தில் தோன்றி வருகிறது. அது உமாதேவியின் கையிலிருந்து தோன்றியதாகப் புராணம் கூறும்,

“அம்மைதன் செங்கை தன்னிச் சிறப்பொடு தோன்றிய கங்கை” - கந்தபுராணம்.

11. ஏழுவகை உலகங்களில் யார் யார் இருக்கிறார்கள்?

பூலோகம் - மனிதர், விலங்குகள்

புவர்லோகம் - வாயு தேவர்கள்

சுவர்லோகம் - இந்திரன், தேவர்கள்

மகலோகம் - மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள்

சனலோகம் - பிரித்தேவர்

தவலோகம்-சனகர் முதலிய மகான்கள்

சத்தியலோகம்- பல பிரம்மதேவர்கள் வாழ்வர்.

12.திருநெல்வேலி என்ற பெயர் எதனால் ஏற்பட்டது?

வேதசர்மா என்ற அந்தணன் இறைவனிடம் பக்தி பூண்டு வழிபட்டான். நெல்லை யாசித்துச் சேர்த்து அரிசியாக்கிச்சமைத்து இறைவனுக்கு நிவேதனம் செய்தான். அவன் அப்படி வாங்கி வந்த நெல்லை ஒரு நாள் உலர்த்தியிருந்த போது வெள்ளம் வந்தது. அது நெல்லை அடித்துக் கொண்டு போகும் நிலையைக் கண்டு அந்தணன் வருந்தினான். இறைவன் வேலி கட்டி நெல்லை காத்தருளினான். அதனால் திருநெல்வேலி என்ற பெயர் ஏற்பட்டது.

**முனைவர் கோ.இரவிச்சந்திரன்**
தமிழ்-உதவிப்பேராசிரியர்.

## அறிந்து கொள்வோம்

- மார்கோபோலோ என்ற சிகரெட் நிறுவனத்தின் முதல் உரிமையாளர் நுரையீரல் புற்றுநோய் தாக்கி இறந்து போனார்
- பழ மரங்களில் நீண்டகாலம் விளைச்சல் தருவது ஆரஞ்சு மரம் சுமார் 400 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அது விளைச்சலைத் தரும்.
- உலகிலேயே மிகச் சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டே அங்குலம் தான்.
- மனித உடலில் சுமார் ஆறு கோடியே ஐம்பது லட்சம் செல்கள் இருக்கின்றன.
- பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிளாமிடோ மோனாஸ் என்ற ஒரு செல் தவாரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.
- பச்சோந்தியின் நாக்கு தன் உடலின் நீளத்தைவிட இரண்டு மடங்கு அதிகம்.
- நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
- நீலத்திமிங்கிலத்தின் எடை 22 யானைகளின் எடைக்குச் சமம். அதன் இதயம் ஒரு மகிழுந்து (கார்) அளவில் இருக்கும்.
- தரையில் முதுகு படும்படி உறங்கும் ஒரே உயிரினம் மனிதன்.
- முன்னால் பின்னால் பக்கவாட்டில் என அனைத்து பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை தேன்சிட்டு.
- தேன்சிட்டு, மரங்கொத்தி போன்ற பறவைகளுக்கு நடக்கத் தெரியாது.
- மனித உடலில் மட்டும் ஏறத்தாழ 17,000 நுண்கிருமிகள் வாழ்கின்றன.
- புற்றுநோய் உட்பட எந்த நோயும் வராத உயிரினம் சுறாமீன்

- நீந்துவதை நிறுத்தினால் இறந்துவிடும் ஒரே உயிரினம் சுறாமீன்.
- தயிராக மாற்ற முடியாத ஒரே பால் ஒட்டகப் பால்.
- துருவக்கரடிகள் அனைத்துமே இடதுகைப் பழக்கம் உடையவை.
- பின்புறமாக மரம் ஏறும் விலங்கு கரடி.
- ஒரு மோட்டார் வாகனத்தில் 30 சதவீத எரிபொருள் தான் வண்டி ஓடுவதற்குப் பயன்படுகிறது. மீதம் உள்ள 70 சதவீத எரிபொருள் கார்பன் மோனாக்சைடு என்ற நச்சு வாயுவாகத்தான் வெளியேறுகிறது.
- சீனாவில் ஒரு மனிதன் பிறந்தநாள் அவன் தாய் வயிற்றில் கருவில் உருவான நாளிலிருந்தே கணக்கிடப்படுகிறது.
- ஆக்டோபசின் இதயம் மூன்றறைகளை உடையது. அதன் இரத்தம் நீல நிறத்தில் இருக்கும்.
- குரங்குகளுக்கு இரண்டு மூளை இருக்கின்றன.
- சூரியனின் ஆண்டுகள் 470 கோடி ஆண்டுகள் (2010 வரை) பூமியின் மீது காணப்படும் பழமையான பாறைகளைக் கொண்டு இதைக் கணக்கிட்டு உள்ளனர்.
- சுகப்பிரசவம் இல்லாமல் தன் தாயின் வயிற்றிலிருந்து கிழித்து வெளியே எடுக்கப்பட்டவர் ஜூலியஸ் சீசர். அதனால் இந்த முறைக்கு சிசேரியன் என்று பெயர்.
- பிறந்த ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.
- நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு நானூறு கேள்விகள் கேட்கும்.
- நாம் நேற்று கட்டியப ள்ளிக் கூடங்கள் எல்லாம் இன்று விரிசல் விடும் நிலையில் இருக்க 'ஹவாங் டி ஆட்சிக் காலத்தில் சீனப்பெருஞ்சுவர் கி.மு.200 களில் கட்டப்பட்டது.
- தைவான் நாட்டிலுள்ள மூன்யூச் மரம் 4120 ஆண்டுகள் பழமையானவை.
- காட்டுக்கே ராஜா என்று சொல்லப்படும் விலங்கு சிங்கம். ஆனால் அதன் ஆயட்காலம் 15 ஆண்டுகள் தான். வயது நிரம்பியிருந்தால்தான் சிங்கம் கர்ஜிக்கும்.
- மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கு சிங்கம்.

- ‘லங்கா வீரன் சுத்ரா’ என்ற நூல் முழுதும் ரத்தத்தால் எழுதப்பட்டது.
- தன் காதை நாக்கினால் தொடும் ஒரே விலங்கு ஒட்டகம்.
- இலைகள் உதிர்க்காத மரம் ஊசியிலை மரம்
- காட்டு வாத்து கருப்பு நிறத்தில்தான் முட்டையிடும்.
- குளிர் காலத்தில் குயில் கூவாது.
- எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பள்ளி சென்றார்.
- லியானார்டோ டாவின்சி ஒரு கையால் எழுதிக்கொண்டே மறுகையால் வரையும் திறன் உடையவர். அவர் வரைந்த உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
- கரப்பான் பூச்சியின் தலையை வெட்டி எறிந்தாலும் அது தலையின்றி ஒன்பது நாள்வரை உயிர்வாழும். ஒன்பதாவது நாளின் இறுதியில் பசியில் தான் இறந்து போகும்.
- கிளியும் முயலும் பின்னால் இருப்பதைத் தலையைத் திருப்பாமலே கண்டுபிடித்து விடும்.
- யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து அதை ஆறால் பெருக்கி வரும் விடையே யானையின் உயரம்.
- கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு இதயம்: மனிதன் இறந்ததும் முதலில் செயலிழக்கும் உறுப்பு இதயம்.
- வால்ட்டிஷ்னி மொத்தம் 32 ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளார்.
- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்
- பெரியார் பொதுக்கூட்டங்களில் சுமார் 21400 மணிநேரம் பேசியுள்ளார். அவருடைய சொற்பொழிவை ஒலி நாடாவில் பதிவு செய்தால் 2 ஆண்டுகள் 5 மாதங்கள் 11 நாட்கள் வரை தொடர்ந்து ஒலிபரப்பாகும்.
- ஒட்டகம் ஒரே சமயத்தில் 90 லிட்டர் தண்ணீரை குடிக்கும். ஆனால் தண்ணீரில் நீந்தத் தெரியாது.
- விமானத்தில் இருக்கும் கருப்புப் பெட்டி ஆரஞ்சு நிறத்திலிருக்கும்.
- யானை,குதிரை நின்று கொண்டே தூங்கும்.
- சில்வண்டுகள் 17ஆண்டுகள் தூங்கும்.

- ➢நீர்நாய் ஒன்றரை நிமிடம் மட்டுமே தூங்கும்
- ➢டால்பின் ஒரு கண் விழித்தேதூங்கும்.
- ➢புழுக்களுக்கு தூக்கம் கிடையாது.
- ➢நாம் இறந்த பிறகும் நம் கண்கள் 6 மணிநேரம் பார்க்கும்.

**மு.கலைவாணி,**
இரண்டாமாண்டு உயிரிதொழில் நுட்பவியல் 'ஆ' பிரிவு.

## ஸ்டெல்லா்ஸ் ஜே என்ற சிட்டுக்குருவி

ராக்கி மலைத்தொடரில் அலாஸ்கா முதல் மெக்சிகோ வரை உள்ள பகுதிகளில் இந்த வகைக் குருவிகள் காணப்படுகின்றன. வட அமெரிக்காவின் மற்ற பகுதிகளிலும் இந்த நீல நிறச் சிட்டுக்குருவி இனம் வசித்து வருகின்றன. நம்நாட்டில் அரிதாகத் தென்படும் ஊசி வடிவக் கொண்டை உள்ள குருவியைப் போல் புளு ஜே சிட்டுக்குருவிகள் உள்ளன. கருப்பு நிறத்தில் கலை, கொண்டை, இறகுப்பகுதிகள். ஆனால் மற்ற பகுதிகள் முழுவதும் பளபளக்கும் நீலம். குருவியைப் போல உருவம்.



ஆனால் காகத்தைப் போன்ற நீளமான வால். காக்கை வகையைச் சேர்ந்ததால் தானோ என்னவோ அதைப் போலவே குணாதிசயம் கொண்ட அதிசயக் குருவியைப் போன்ற பறவையாக ஸ்டெல்லா்ஸ் ஜே உள்ளது. இதில் சில பறவைகளின் தலைப்பகுதி வெண்மை நிறத்திலும் இருக்கும். இரை பெற வேண்டுமானால் மனிதர்களுக்கு வெகு அருகாமையில் பயமில்லாமல் வந்து உண்ணும். ஆனால் மற்ற நேரங்களில் கூட்டமாகத் தொலைவில் வசிக்க விரும்பும் பறவை. முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொறிக்கும். சிறிய புழுக்கள், பூச்சியினங்கள், வண்டுகள் தவிர பழங்கள், பழக்கொட்டைகளை தனது சிறிய அலகுகளால் கொத்தி உண்ணும் சின்னஞ்சிறிய வண்ணப்பறவையாக ஸ்டெல்லா்ஸ் ஜே உள்ளது.

**எம்.பிரபாகர், ரா.சந்தோஸ்குமார்,**
மூன்றாம் ஆண்டு இளங்கலை மின்னணுவியல் துறை.

# World Population

Total population: 77,000,000 Billion. Following list the first 30 Ranks of World Population as 2015 senses.

- ❖Bangladesh - 157,666,000
- ❖Brazil - 203,740,000
- ❖Burma – 51,419,420
- ❖China - 1,367,620,000
- ❖Colombia - 47,954, 300
- ❖Congo – 71,246,000
- ❖Egypt - 87,847,900
- ❖Ethiopia - 90,076,012
- ❖France – 66,100,000
- ❖Germany – 80,783,000
- ❖India - 1,265,470,000
- ❖Indonesia – 255,461,700
- ❖Iran – 78,045,000
- ❖Italy - 60,782,027
- ❖Japan - 127,070,000
- ❖Kenya – 46,749,000
- ❖Mexico - 121,005,815
- ❖Nigeria - 183,523,432
- ❖Pakistan- 188,702,000
- ❖Philippines - 100,855,800
- ❖Russia- 146,300,000
- ❖South Africa - 54,002,000
- ❖South Korea - 50,423,955
- ❖Spain – 46,507,760
- ❖Tanzania – 47,421,786
- ❖Thailand – 64,871,000
- ❖Turkey – 76,667,864
- ❖United Kingdom - 64,105,654
- ❖United States - 320,200,000
- ❖Vietnam - 90,730,000

# Tamil Population Outside Of Tamilnadu

- ❖Australia – 65,000
- ❖Bahrain – 7,000
- ❖Burma – 500,000
- ❖Burnie – 25,000
- ❖Cambodia – 1,000
- ❖Canada – 400,000
- ❖China – 5,000
- ❖Denmark – 9,000
- ❖Fiji – 110,000
- ❖France – 105,000
- ❖Germany - 65,000
- ❖Guadeloupe – 40,000
- ❖Guyana – 100,000
- ❖India - 800,000
- ❖Indoneshiya – 50,000
- ❖Italy – 100,000
- ❖Jamaica – 35,000
- ❖Kuwait – 180,000
- ❖Malasiya - 2,100,000

❖Maldives – 10,000

❖Martinique – 15,000

❖Mauritius – 130,000

❖Netherland – 20,000

❖Newzeland – 5,000

❖Norway – 13,000

❖Quatar – 4,000

❖Reunion – 126,000

❖SaudiArabia – 200,000

❖Seychelles – 4,000

❖Singapore – 410,000

❖SouthAfrica - 505,000

❖Srilanka - 2,500,000

❖Suriname – 50,000

❖Sweden – 10,000

❖Switzerland - 52,000

❖Thailand – 10,000

❖Tobago – 250,000

❖UAE – 200,000

❖UK – 300,000

❖US – 135,000

❖Vietnam – 3,000

**Total: 16,835,000.**

**-B.Priyadharshini**
II BA Tamil

## உலகின் பெரியவை

உலகிலேயே மிகப்பெரிய பள்ளிக்கூடம் - தென்முனை உயர்நிலைப் பள்ளி – கொல்கத்தா.

உலகிலேயே மிகப்பெரிய நூலகம்- காங்கிரஸ் நூலகம், கேப்பிடல்ஹில் அமெரிக்கா

உலகிலேயே மிகப்பெரிய வங்கி – உலகவங்கி – வாஷிங்டன் - அமெரிக்கா

உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம்- சகாரா- வட ஆப்பிரிக்கா

உலகிலேயே மிகப்பெரிய ஹோட்டல் - ஹில்டன் ஓட்டல் - அமெரிக்கா

உலகிலேயே மிகப்பெரிய அரண்மனை - இம்பீரியல் அரண்மனை – சீனா

உலகிலேயே மிகப்பெரிய பாலம் - ஹௌரா பாலம் - கொல்கத்தா

**நா.சரண்யா**
இளங்கலை தமிழ் முதலாமாண்டு

## சிறப்புப்பகுதி

### நம்ம ஊர் செய்தி

**தமிழகத்தின்**
**ஒரே பெண் லாரி டிரைவர்**



ஈரோடு மாவட்டம் கோபிச் செட்டிப்பாளையம் வட்டம் கள்ளிப்பட்டியில் வசிக்கும் திருமதி. ஜோதிமணி இன்று தமிழ் நாட்டின் ஒரே பெண் லாரி டிரைவர். சிறப்பு மிக்க அந்தப் பெண்மணியைச் சந்திப்பதற்காக செவ்வாழைத் தோட்டங்கள்நிறைந்த கள்ளிப்பட்டிக்குச் சென்ற போது, மறுநாள் அகமதாபாத் பயணிப்பதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்.அதற்கிடையில் அவர் அளித்த சிறப்புப்பேட்டி.

"தன் குடும்பத்தில் அப்பா, அண்ணன், கணவர் என அனைவரும் டிரைவர்களாக இருப்பதால் தனக்கு டிரைவர் பணியில் இயல்பாகவே ஆர்வம் ஏற்பட்டது" என்று கூறும் ஜோதிமணி பத்து நாட்களுக்கு ஒருமுறை பத்து நாள் பயணமாக, கள்ளிப்பட்டியில் இருந்து குஜராத் மாநிலம் அகமதாபாத்துக்கு ஜவுளி, ஆயத்த ஆடைகள் நிறைந்த சரக்கு லாரியைத் தனி ஆளாக ஓட்டிச்செல்கிறார்.

2008-இல் தன் கணவர் வைத்திருந்த இரு லாரிகளுக்கு பொறுப்பான டிரைவர் கிடைக்கவில்லை. அதே நேரத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயான தனக்கும் குடும்பப் பொறுப்பும் அதிகரித்ததால்,தனது 25-வது வயதில், தானே லாரி ஓட்டுனராகி கணவருக்கு உறுதுணையாக இருக்கலாம் என்று தைரியமாக முடிவெடுத்தார்.அதற்காகத் தன் கணவர் உதவியுடன் லாரி ஓட்டும் பயிற்சியைத்தீவிரமாக மேற்கொண்டார். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த ஜோதிமணி ஓட்டுனர் உரிமம் பெறுவதற்காகத் தனித்தேர்வு மூலம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கனரக வாகம் ஓட்டுவதற்கான உரிமம் பெற்றார்.ஓட்டுனர் உரிமம் பெற்றவுடன் முதல் பயணமாக ஹைதராபாத்துக்குச் சரக்கு லாரியை ஓட்டிச்சென்றார்.

அதைத்தொடர்ந்து கடந்த நான்கு ஆண்டுகளாக அகமதாபாத்தை நோக்கித்தான் தொடர் பயணம். தொடக்கத்தில் இரண்டு லாரிகள் இருந்ததால் கணவர் ஒரு லாரியையும், ஜோதிமணி ஒரு லாரியையும் ஓட்டிச்சென்றனர். தற்போது ஒரு லாரி மட்டுமே இருப்பதால் ஜோதிமணி மட்டும் தனியாகவும், சில நேரங்களில் கணவருடனும்அகமதாபத்துக்கு சரக்கு லாரியை ஓட்டிச்செல்கிறார்.

வெளிமாநிலங்களுக்கு லாரியை ஓட்டிச் செல்லும் போது தொடக்கத்தில் கொஞ்சம் அச்சமாக இருந்தது அப்புறம் எளிதாகப் பழகிக்கொண்டேன் என்று கூறும் ஜோதிமணி இதுவரை எவ்வித சிறு விபத்துமின்றி லாரி ஓட்டிக் கொண்டிருக்கிறார். மகாராஷ்டிராவில் வைத்து ஒருமுறை வேக்கப் ட்யூப் அறுந்து லாரி கட்டுப்பாட்டை இழந்த போது கவனமாகக் கையாண்டு லாரிக்கும் தனக்கும் சேதமின்றி நிறுத்தினார். அதிலிருந்து தான் நிறைய பாடம் கற்றதாகக் கூறுகின்றார். லாரியில் இங்கிருந்து அகமதாபாத் போக நான்கு நாள்,திரும்பி வர நான்கு நாள், சரக்குகளை ஏற்ற, இறக்க இரண்டு நாள் என மொத்தம் பத்து நாட்கள் ஆகின்றன ஒரு ட்ரிப்க்கு. அந்த பத்து நாட்களும் உணவு, தட்பவெப்பம் என எத்தனையோ இடர்பாடுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் மிகுந்த மனவலிமையோடு எதிர் கொள்கிறார். பத்து நாள் பயணம் முடித்து வீட்டி பத்து நாள் ஓய்வு அப்புறம் மீண்டும் பத்து நாள் பயணம் என பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்.இப்பயணக்காலங்களில் தன் இரு குழந்தைகளையும் தன்னுடன் இருக்கும் அம்மாயி சரஸ்வதி தான் பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறார். பத்து வயதுடைய தன் மகனையும், ஏழு வயதுடைய தன் மகளையும் இப்பயணத்தால் அடிக்கடி பிரிய நேரும் போது தன் மனசு (தாய் மனசு) மிகவும் கஷ்டப்படுகிறது. அதுமட்டுமன்றி சொந்த பந்தங்களின் வீட்டு விஷேஷத்திலும் அதிகமாகக் கலந்து கொள்ள முடிவதில்லை என்றார் ஜோதிமணி.

பல மாநிலங்களுக்கிடையில் நடக்கும் பயணம் என்பதால் தமிழ் மட்டுமன்றி இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளையும் அடிப்படையில் கற்றிருக்கிறார். தன் திருமணத்திற்கு முன்பேஹிந்தி படிக்கத் தொடங்கினார். அதோடு ஆங்கில வழியில் படிக்கும் குழந்தைகள் மூலம் ஆங்கிலத்தையும்

கற்றிருக்கிறார். அதனால் ஆந்திரா தாண்டி மகாராஷ்ட்ரா, குஜராத் மாநிலங்களில் பயணிக்கும் போது மொழிப்பிரச்சினைகள் ஏதுமின்றி எளிதாக பயணிக்கிறார்.

தான் லாரி டிரைவராக இயங்குவதை தொடக்கத்தில் உறவுகளும், ஊராரும் கேலியாகத் தான் பார்த்தார்கள். ஆனால் எனது தன்னம்பிக்கையாலும் மன வலிமையாலும் அவற்றை யெல்லாம் தைரியமாக எதிர்கொண்டு எளிதில் கடந்து வந்துவிட்டேன். இன்று அவர்களின் (சமூகம்) பார்வை மாறியிருக்கிறது. இன்று என்னை வெளியிடங்களில் வைத்துப் பார்க்கும் சுற்றுவட்டாரத்துமக்கள் பெருமையாகப் பேசுவதோடு,தைரியமான பெண் என்று உற்சாகப்படுத்துகிறார்கள் என்கிறார் ஜோதிமணி.

ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்திய சமூகத்தில், ஆணும் பெண்ணும் சமம், ஆணுக்கு நிகராக பெண்களாலும் எல்லாப் பணிகளிலும் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்ற அடிப்படை உண்மையை ஜோதிமணிகளால் தான் இந்திய சமூகத்திற்குப் புரியவைக்க முடியும்.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.



பெயர் : S. அனுஸ்ரீ
வகுப்பு : I-B.SC(CS)-'C'

## ஒளிநிழல் படம்

கவிபாடும் காட்சிகள் – த.சுந்தரராஜ்



